அவர்கள் சொல்லியபடி இங்கே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எடுத்த காரியத்தை முடிக்கக் கூடிய அரசாக இருக்கின்ற காரணத்தால் ஒரு வார காலத்தில் பட்டுக்கோட்டையிலிருந்து துர்க்கையம்மன் கோவில் வரை இயக்கப்பட்டுக்கொண்டிருந்த அந்தப் பேருந்து 4 முறை இயக்குவதற்கு (குறுக்கீடு) 6 முறை இயக்குவதற்கு ஒரு வார காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. கந்தசாமி. இருக்கையில் இல்லை.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னைப் பல்கலைக்கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*** மாண்புமிகு பேராசிரியர் க.பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.